ஹப்புத்தளை நகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹப்புத்தளை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹப்புத்தளை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் நகர அபிவிருத்திக்கான விசேட வங்கிக் கணக்கின் மீதி ரூபா 144,941 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும்.	சகல வங்கிக் கணக்கினதும் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.
(ஆ)	பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களுக்காக செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 148,072 செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 45,334 ஆன காகிதாதிகள் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 215,254 ஆன ஐந்து செலவினங்களுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 236,100 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 102 அலகுகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,430,269 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் கூட்டுமொத்தம் ரூபா 6,374,759 ஆனமையால் ரூபா 55,510 வேறுபாடு காணப்பட்டது.	வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,232,634 கேள்வி கடை வாடகை வருமான மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஆவணங்களை பரீட்சித்த பின்னர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கும் சரியான மீதிகளுடன் நாளது வரையாக்குவதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.	மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சனாதிபதி செயலாளரின் 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் SP/RD/02/10 என்ற சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி மற்றும் அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 27 மற்றும் 29 ஆம் பிரிவுகள்	அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் சபையினால் 103 குடும்ப அலகுகளுக்காக சபைக்குச் சொந்தமான 03 காணிகள் 1998 ஆம் ஆண்டு முதல் ரூபா 250 மாதாந்த வாடகைத் தொகையின் கீழ் கூறுகளாக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையை ஆழமாக ஆய்வு செய்த பின்னர் பதில் அறிக்கையிடுதவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 27 மற்றும் 29 ஆம் பிரிவுகள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிதிப்பிரமாணம் 371	1988 முதல் 2015 வரையான கால எல்லையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 157,277 ஆன 12 முற்பண மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை.	நீண்ட காலமாக அறவிடாமல் காணப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் உரிய மீதிகளை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.	மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,517,179 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,408,894 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	வருமான மான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	2,100,000	2,425,496	2,335,643	1,875,286	2,100,000	2,182,919	1,252,537	930,382
ii.	வாடகை	27,807,251	30,925,977	21,871,883	31,879,066	16,526,324	24,427,707	12,578,598	11,849,108
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	648,000	1,156,550	803,400	443,050	518,000	732,800	642,900	89,900
iv.	ஏனைய வருமானம்	3,504,200	4,576,087	2,852,878	3,459,004	2,982,700	4,177,992	1,395,005	2,782,986
	மொத்தம்	34,059,451	39,084,110	27,863,804	37,656,406	22,127,024	31,521,418	15,869,040	15,652,376

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**மொத்த வருமானம்**		
	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 39,084,110 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 17,872,733 அறவிடப்படாது இருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 46 சதவீதம் ஆகும்.	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ரூபா 5,159,875 அறவிடப்பட்டள்ளது.	நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.
(ஆ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,504,588 ஆன நிலுவை வருமான வரி வருமானத்தில் மீளாய்வாண்டில் ரூபா 297,977 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.	நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை ஆதனவரி மற்றும் வரி அறவிடப்படல் வேண்டும்.
(ii)	09 ஆதனவரி அலகுகளுக்குரிய 2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 338,172 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(இ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய வீட்டு வாடகை வருமானம் ரூபா 467,392 ஆக இருந்ததுடன் அதில் ரூபா	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை வருமானம்

	329,892 ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டியிருந்தது.		அறவிடப்படல் வேண்டும்.
(ii)	ஹப்புத்தளை விருத்தினர் விடுதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து நகர சபைக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 4,049,019 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை.	முன்னாள் விருந்தினர் விடுதி வாடகை வருமானத்தின் அடிப்படையில் செயற்படுத்தி நபரிடம் உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக கொழும்பு வணிக நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கின் தீர்ப்பு கிடைக்கப் பெற்ற பின்னர் இது தொடர்பாக அறிக்கையிடப்படும்.	நிலுவை வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.
(ஈ)	**அனுமதிப் பத்திரக் கட்டணம்**		
	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் ரூபா 2,521,447 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,084,139 ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டிக் காணப்பட்டது.	நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உபவிதிகளின் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 131,238 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,749,191 ஆகக் காணப்பட்டது.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,142,361 முத்திரைக் கட்டண நிலுவை மீதியில் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 2,393,170 தொகை அறவிடப்பட்டுள்ளது.	நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் ரூபா 13,097,364 மீதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	சட்டத்தின் பிரகாரம் சபை நிதியத்தை பயன்படுத்தி சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கூட்டுப்பெறுமதி ரூபா 139,857,325 ஆன 03 சொத்து மீதிகளுக்கு உரிய நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.	நாளது வரையாக்கலுடன் நிலையான சொத்து பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பதிவேடுகள் சரியாக நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.

3.3 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் ஒப்பீடு செய்த போது 05 பதவிகளுக்குரிய 07 வெற்றிடங்களும், 02 பதவிகளுக்குரிய 03 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டது.	கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள உரிய வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பாக மாதாந்தம் பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பியிற்சி) அலுவலகத்தில் EHRM முறைமையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பதவியணியினர் மீளாய்வு அறிக்கை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.	பதவியணியினரை அங்கீகரித்தக் கொள்ளல் வேண்டும்.
(ஆ)	ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து 1996 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 61,651 நிலுவைக் கடன் மீதியை தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிணையாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.	உரிய மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்காகவோ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	நிலுவை ஊழியர் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2014 நவம்பர் மாதத்தின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் ஹப்புத்தளை நகர சபைக்கு கையளிக்கப்பட்ட கம்பக்டர் மீளாய்வாண்டு வரை 09 வருடங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.	சபைக்கு கையளிக்கப்பட்ட கம்பெக்டர் ஹப்புத்தளை நகர சபை நில முரண்பாடுகளின் அடிப்படையில் அமுல்படுத்துதல் கஸ்டமாக இருந்தமையால் அகற்றுவதற்காக பிரதிப் பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அலுவலகத்தினால் பரீட்சித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தீர்மானம் எடுக்கப்பட்டமை இதுவரையும் அறிவிக்கப்படவில்லை.	தேவையுள்ள ஏனைய சபைகளுக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2012 மார்ச் 05 ஆம் திகதி ஹல்துமுல்ல பிரதேச சபையினால் ஹப்புத்தளை நகர சபைக்கு கையளிக்கப்பட்ட கைடெக்டர் கிடைத்த திகதியில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது.	இது தொடர்பாக பிரதி பிரத செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சொத்துக்களை சரியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
ஹப்புத்தளை நகர சபையினால் தமது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற 14 காணிகள் காணி கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் கையளித்தல் கட்டளை கையளிக்கப்பட்டிருக்க வில்லை.	ஏடுகளின் பிரகாரம் உரிய சொத்துக்களை இனங்காணல் நடைமுறையில் கஸ்டமாக இருந்ததுடன் மேலும் நீண்ட ரீதியில் பரீட்சிக்கப்படுகின்றது.	காணி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய கையளித்தல்களை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும்.

3.6 சுற்றாடல் பிரச்சனைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 மே 05 ஆம் திகதிய இலக்கம் CEA/COMP/BD/C/004/ 2023 என்ற கடிதம் மூலம் கஹகலவத்த கழிவுப் பொருள் அகற்றும் காணி	பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுகின்றது.	மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும்.

தொடர்பாகவும், கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் பரீட்சித்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் 2025 சனவரி 08 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டிற்காக நகர சபை தயாரித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், ஆண்டின் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பீடு செய்த போது 06 வருமான விடயங்களில் 11 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையும், 06 செலவின விடயங்களில் 13 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலும் முரண்கள் காணப்பட்டது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	பாதீடு சரியான தகவல்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.